
உ
சிவமயம்

# நினைவு மலர்



பட்டிருப்பு - களுவாஞ்சிகுடி உயர் வேளாளர்குலம் - பெரிய கவுத்தன் குடியைச் சேர்ந்த விசாலாட்சி சாமித்தம்பி தம்பதிகளின் மூத்த புதல்வி

## அமரர் திருமதி நவரெத்தினபிள்ளை
## விஜயசுந்தரி (வள்ளிமுத்து)

## 24.03.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருப்பு ~ களுவாஞ்சிகுடி
உயர் வேளாளர்குலம் ~ பெரிய கவுத்தன்
குடியைச் சேர்ந்த

## அமரர் திருமதி நவரெத்தினபிள்ளை விஜயசுந்தரி (வள்ளிமுத்து)

அவர்களின்

# நினைவு மலர்

தகவல்

மூத்த மகன்

**நவரெத்தினபிள்ளை கருணானந்தராசா**

தொகுப்பும் வெளியீடும்

மருமகள்

**திருமதி நிர்மலா கருணானந்தராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பின் உருவமாய் பாசத்தின் சிகரமாய்

பண்பின் உறைவிடமாய் அறிவின் உறுதுணையாய்

உற்றார், உறவினருக்கு கலங்கரை விளக்காய்

தன்னைச் சூழ்ந்துள்ளவர்களுக்கு நற் சகோதரியாய்

நானிலம் போற்ற என்றும் புன்னகையுடன் வாழ்ந்த

எமது குலவிளக்கே! எம் அன்புத் தெய்வமே!

விஜயசுந்தரி(வள்ளிமுத்து) அம்மா

எம்மை ஆளாத் துயரத்தில் ஆழ்த்தி

மீளாத் துயில் கொண்டீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்தித்து

இந்த மலரை உங்கள் பாதகமலத்தில்

அன்போடும் கண்ணீரோடும் சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி**

**சகோதரி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை

மண்ணில்

13
♦
08
♦
1925



விண்ணில்

22
♦
02
♦
2017

# அமரர் திருமதி நவரெத்தினபிள்ளை விஜயசுந்தரி (வள்ளிமுத்து)

## திதி வெண்பா

ஆண்டுநல் துர்முகியில் மாசி அபரபக்கம்
பூண்டதிதி ஏகா தசியினிலே - காண்கினிய
பட்டிருப்பு வள்ளிமுத்து அன்னை அரனாரின்
நற்பதமே சேர்ந்தார் நவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச புராணம்



## விநாயகர் துதி

அல்லல் போம் வல்வினை போம் அன்னைவயிற்றிற் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம் போம் - நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்

## தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீ புரி நல்வினைப் பயனிடை முழுமணித்தரளங்கள்
மன்னு காவிரி சூழ் திரு வலஞ்சுழி வாணனை வாயார
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தளம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்றருள் புரியாயே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர்குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேலுன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழிருக்க வென்றார்

## திருப்புகழ்

காலனிடத் தணுகாதே
காசினியில் பிறவாதே
சீலஅகத் தியஞான
தேனமுதைத் தருவாயே
மாயனுக் கரியானே
மாதவரைப் பிரயானே
நாலுமறைப் பொருளோனே
நாககிரிப் பெருமானே.

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூறையங்காட்டிடைக் கொண்டு பொய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவபுராணம்



தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லலறுத்தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

## திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள்வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

மெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயில் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றாமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

முருகன் துணை

ஓம் சரவணபவ நம:

# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம், நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

அமர இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

நூல்

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்,
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணியாட,
மைய நடஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க என்று உவந்து
வரவர வேலாயுதனார் வருக,
வருக வருக மயிலோன் வருக,
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக,
வாசவன் மருகா வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசக் குறமகள் நினைவோன் வருக,
ஆறுமுகம் படைத்த ஐயா வருக,
நீறிடும் வேலவன் நித்தம் வருக,
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக,
சரவண பவனார் சடுதியில் வருக,
ரஹண பவச, ரரரர ரரர
ரிஹண பவச, ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும், கிளரொளி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக,
ஆறு முகமும், அணிமுடி ஆறும்,
நீறிடு நெற்றியும், நீண்ட புருவமும்,
பன்னிரு கண்ணும், பவளச்செவ் வாயும்,
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்,
ஈராறு செவியில் இலகு குண்டலமும்,
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து,
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்,
முப்புரி நூலும், முத்தணி மார்பும்
செப்ப ழகுடைய திருவயிறு உந்தியும்,
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்.
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதொடை அழகும், இணைமுழந் தாளும்,
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு, டிகுகுண டிகுண
ரரரர ரரரர, ரரரர ரரர
ரிரிரி ரிரிரிரி, ரிரிரிரி ரிரிரி
ரிரிரிரி ரிரிரிரிரி ரிரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு, டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து, மயிலோன் விந்து
முந்து முந்து, முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும், வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திரு வடியை, உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க!
என்உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால், பாலனைக் காக்க
அடியேன் வதனம், அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்து இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழு பதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணையாக,
நாபிக் கமலம், நல்வேல் காக்க
முப்பால் நாடியை, முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து, கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரை இருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்தில், சாமத்தில், எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல,
வல்ல பூதம், வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல்படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்,
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட,
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்,
எல்லினும், இருட்டினும், எதிர்படும் அண்ணரும்,
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்,
விட்டாங் காரரும், மிகுபல பேய்களும்,
தண்டியக் காரரும், சண்டா ளர்களும்,
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட,
ஆனை அடியினில் அரும்பா வைகளும்,
பூனை மயிரும், பிள்ளைகள் என்பும்,
நகமும் மயிரும், நீள்முடி மண்டையும்,
பாவைகள் உடனே, பல கலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும், ஒட்டியச் செருக்கும்,
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதும், அஞ்சனமும், ஒருவழிப் போக்கும்,
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட,
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
கால தூதர் எனைக் கண்டால் கலங்கிட,
அஞ்சி நடுங்கிட, அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி, மதிகெட்டு ஓட,
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம், கதறிடக் கட்டு
கட்டி உருட்டு, கால்கை முறியக்
கட்டு கட்டு, கதறிடக் கட்டு,
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட,
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்,
பற்று பற்று பகலவன் தணல் எரி,
தணல்எரி தணல்எரி தணல்அது ஆக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவிடு வேலை வெருண்டது ஓட,
புலியும் நரியும், புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஒடத்,
தேளும் பாம்பும் செய்யான் பூரான்,
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க,
ஒளுப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலையங் சயங்குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன், கைத்தாள் சிலந்தி,
பற்குத்து அரணை, பருவரை யாப்பும்,
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்,
நில்லாதோட, நீ எனக்கு அருள்வாய்,
ஈரேழு உலகமும், எனக்கு உறவாக,
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா,
மண்ணாள் அரசரும், மகிழ்ந்து உறவாகவும்,
உன்னைத் துதிக்க, உன் திருநாமம்
சரவண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா! குகனே! கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த, இனியவேல், முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்காமத்து உறை, கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ், அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும், செங்கல்வ ராயா!
சமராபுரி வாழ், சண்முகத்து அரசே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நா இருக்க, யான் உனைப் பாட,
எனைத் தொடந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக,
ஆடினேன் நாடினேன், ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்,
பாச வினைகள் பற்றது நீங்கி,
உன்பதம் பெறவே, உன்அருள் ஆக
அன்புடன் இரட்சி, அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக, வேலா யுதனார்,
சித்தி பெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க,
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க,
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க,
வாழ்க வாழ்க மலைக் குரு வாழ்க,
வாழ்க வாழ்க மலைக் குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்,
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க,
எத்தனை குறைகள், எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீ குரு, பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள், பெற்றவ ளாமே,
பிள்ளை யென்று அன்பாய்ப் பிரியம் அளித்து,
மைந்தன் என்மீது உன் மனமகிழ்ந்து அருளித்,
தஞ்சம் என்று அடியர் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்,
காலையில் மாலையில், கருத்துடன் நாளும்,
ஆசாரத்துடன் அங்கம் தலக்கி,
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்,
கந்தர், சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்,
ஒருநாள் முப்பத் தாறு உருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்,
திசைமன்னர் எண்மர், செயலதருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்,
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்.
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்,
கந்தர் கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்,
நல்லோர் நினைவில் நடனம் புரியும்.
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்து என உள்ளம், அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து ணவாகச்
சூர பத்மாவைத் துணித்தகை யதனால்.
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி,
என்னைத் தடுத்து ஆட்கொள, என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி.
தேவர்கள் சேனா பதியே போற்றி.
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி,
இடும்பா யுதனே இடும்பா போற்றி,
கடம்பா போற்றி கந்தா போற்றி.
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கு ஓர் அரசே!
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்.
சரணம் சரணம் சரவண பவஓம்,
சரணம் சரணம் சண்முகா சரணம்

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்டினத்தடிகள் பாடல்கள்

**அன்னையாருக்கு இறுதிக்கடன் இயற்றும் பொழுது பாடியவை**

01. ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப் -
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் ~ செய்யவிரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி.

02. முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் ~ தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

03. வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து ~ முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

04. நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே ~ அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

05. அரசியோ நான்இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசைஇட்டுப் பார்த்து மகிழாமல் ~ உருசிஉள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு.

## விருத்தம்

07. முன்னை இட்டதீ முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ தென்இ லங்கையிலே
அன்னை இட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே.

08. வேகுதே தீஅதனில் வெந்துபொடி சாம்பல்
ஆகுதே பாவியேன ஐயகோ - மாக்கு
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்தக கை.

09. வெந்தாளே சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளே - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய.

10. வீற்றிருந் தாள்அன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிசார்ந்த மன்னரும் மற்றும்
உள்ளோரும் முடிவில் ஒரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவதுங்
கண்டு பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பது
அல்லால் பொன்னின் அம்பலவன்
அடிசார்ந்து நாம் உய்ய வேண்டும்
என்றே அறிவார் இலையே!

நல்லாய் எனக்கு மனுஒன்று
தந்தருள் ஞானம் இலாப்
பொல்லா எனைக்கொன்று போடும்
பொழுது இயல் பூசைசெபம்
சொல்லார் நல்கோயில் நியமம்
பல்வகைத் தோத் திரமும்
எல்லாம் முடிந்த பின்கொல்லு
கண்டாய் கச்சி ஏகம்பனே!

ஒழியாப் பிறவி எடுத்தேங்கி
ஏங்கி உழன்ற நெஞ்சே
அழியாப் பதவிக்கு அவுடதம்
கேட்டி அநா தியனை
மழுமான் கரத்தானை மால்விடை
யானை மனத்தில் உன்னி
விழியால் புனல்சிந்தி விம்மியழு
நன்மை வேண்டும் என்றே.

'உறங்குவதுபோலும் சாக்காடுறங்கி
விழிப்பதுபோலும் பிறப்பு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ஸ்ரீமதி நவரெத்தினபிள்ளை விஜயசுந்தரி (வள்ளிமுத்து)

### அவர்களது வாழ்க்கைச் சுருக்கம்

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'**

என்று கூறிய செந்நாப்புலவர் திருவள்ளுவன் வாக்குப்படி இவ்வையத்தினுள் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனடி சேர்ந்தவர் அமரர் ஸ்ரீமதி நவரெத்தினபிள்ளை விஜயசுந்தரி (வள்ளிமுத்து) அவர்கள்.

இலங்கை தீவகத்தின் கிழக்கே மட்டக்களப்பு மாநகரின் பட்டிருப்புத் தொகுதியில் உள்ள களுவாஞ்சிக்குடி எனும் கிராமத்தில் 1925ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி பெரும் வணிகர் ஸ்ரீமான் சாமித்தம்பி விசாலாட்சி தம்பதிகளுக்கு (வேளாளர் குலத்தில் பெரிய கவுத்தன்குடியில்) மகளாக பிறந்தார். **'உடன் பிறப்பில்லா உடம்பு பாழ்'** என்ற வள்ளுவரின் வாக்கின்படி அமரர் ஸ்ரீமதி விஜயசுந்தரி அவர்களுக்கு தங்கை மகேஸ்வரியும், தம்பி சண்முகநாதன் அவர்களும் உடன்பிறப்புகளாவர். அதில் சண்முகநாதன் (ஆசிரியர்) அமரராகிவிட்டார். தங்கை மகேஸ்வரி யாழ்ப்பாண மாநகரில் உடுவில் எனும் ஊரில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றார்.

விஜயசுந்தரிக்கு உரிய மணப்பருவம் அடைந்ததும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தம்பிலுவில் எனும் தனிப்பெரும் தமிழ் பாரம்பரிய கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீமான் வில்லியம்பிள்ளை நாகமணி தம்பதிகளின் மூத்த புதல்வன் நவரெத்தினபிள்ளைக்கு (ஆசிரியர்) விஜயசுந்தரியை 1942ஆம் ஆண்டு பெரியோர்கள் திருமண பந்தத்தில் இணைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தனர். இவர்கள் இல்லறத்தின் நற்பயனாக 3 பெண்பிள்ளைகளும், 6 ஆண் பிள்ளைகளுமாக மொத்தம் 9 நவமணிகளைப் பெற்று. ஊரும், சுற்றாரும், உறவினரும் வாழ்த்த சிறப்பாக இல்லற வாழ்க்கையினை நடாத்தி வந்தனர்.

இவர்களது பிள்ளைச் செல்வங்கள் முறையே தயாநிதி, அமரர் கலாநிதி, கருணானந்தராசா (கொழும்பு), சண்முகராசா, குகராசா (கனடா), ஆனந்தராசா, அமரர் ரவிந்திரராசா, பிரகலாதன் (கிறீஸ்லாந்து), ரஜனி (பட்டிருப்பு) ஆகியோராவர்.

பிள்ளைகளின் திருமணத்தின் பயனாக பேரின்பராசா, நிர்மலா, மேகலா, பிரபாஜினி, கலாநிதி, வசந்தா, பரந்தாமன் (கண்ணன்) ஆகியோரை அருமையான மருமக்களாகப் பெற்று மகிழ்ந்தார். இந்த மருமக்களையும் தன் மக்களாக நேசித்து அன்பு காட்டினார். பேரப்பிள்ளைகள் பால் பெரும் பாசம் காட்டி உவகையுற்றார். அமரர் ஜெனீஸ்வரன், சுபனீஸ்வதன், ஜினோதினி, நிலோஜினி, வெனின்சன், மயூரதன், அஸ்வினி, தனுஷா, பகீரதன், ஜனோஷன், பவித்திரா, கிருஷாந்தன், நிஷாந்தினி, சுகந்தன், சுபானி(சுது), அனுசியா, ஏலியா பிரோமோதினி, தனுஜெயன் ஆகிய பேரப்பிள்ளைகளை அகம் மகிழ கொஞ்சி மகிழ்ந்து நிறைவு கொண்டதுடன், பூட்டப்பிள்ளை களையும் கண்டு மகிழ்ந்தார்.

எல்லோரையும் இன்முகத்துடன் உபசரிக்கும் பண்புமிக்கவர். யாருக்கும் மனதாலும் தீங்கு விளைவிக்காத உத்தமராய் வாழ்ந்த அமரர் ஸ்ரீமதி விஜயசுந்தரி(வள்ளிமுத்து) அவர்களது ஆத்ம சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனையும், அவரது குலதெய்வமான ஸ்ரீ வீரபத்திரசாமியையும் பிரார்த்திக்கின்றோம்.

பாசமிகு மூத்த மகன்

**நவரெத்தினபிள்ளை கருணானந்தராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்

ஆல மரமாய் நீ வாழ்ந்தாய் ~ அம்மம்மா
அதன் விழுதுகளில் உன் பிள்ளைகளும்
பேரப்பிள்ளைகளும் விளையாடித் திரிந்தோம் ~ அம்மம்மா
விழுதின் ஈரத்ததை இப்போதும் உணர்கிறோம்
விழுதின் பலங்கொண்ட மரத்தை
அசைக்க முடியவில்லை யாராலும் ~ ஆனால்
பலம் கொண்ட மரம் சாய்ந்தது காலனால்
மீண்டும் நீ எழுவாய்! விழுதுகளுக்கு பாலூட்ட
அப்போது நீ மரமாய் இருந்து
நிழல் கொடுப்பாய் அனைவருக்கும்.

**பேரின்பராசா சுபெனீஸ்வதன்**
பேரப்பிள்ளை
களுவாஞ்சிகுடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் புலம்பல்

*எனதருமை அம்மம்மா!*
*எனது ஒவ்வொரு வளர்ச்சியும்*
*ஒவ்வொரு உயர்ச்சியும்*
*உங்கள் வழிகாட்டலில் நிகழ்ந்தது*
*உங்களை கைப்பிடித்து நாங்கள் வளர்ந்தோம்*
*எங்களைக் கைவிட்டு நீங்கள் சென்றதேனோ!*
*அம்மம்மா! அம்மம்மா!*
*நீங்கள் தெய்வமாய் நின்று எங்களை*
*என்றென்றும் காத்து வழிநடத்துவீரென*
*வாழ்வெல்லாம் காத்திருப்போம்.*

அம்மம்மாவின் பிரிவால் வாடும் பேரப்பிள்ளைகள்
**வெஞ்சுராஜினோதினி,**
**மதன்லால்நிலோஜினி,**
**பேரின்பராசா வெனின்சன்**
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PEACE TRAVEL

*She passed away last month.*

*Missing you grandmother.*

*Death is opposite of birth.*

*Death is not possible of life.*

*What takes birth dies but the life continues.*

*One day I will see you in the sky you will be there and blessing with your big smile.*

**Your loving Grandson**
**Karunanantharajah Maiyourathaan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அப்பம்மாவிற்கு விண்ணுலகக் கடிதம்

அப்பாவிற்கு அம்மாவாய் கிடைக்கப் பெற்றதனால்
அப்பம்மா என்று அன்போடு அழைக்க
நானும் பேரப்பிள்ளையாய் வந்தடைந்தேன்
இனிமேல் யாரை? அப்பம்மா என்றழைப்பேன்?

விஜயசுந்தரி என்ற நாமத்திற்கு
உகந்தாற் போல் அழகு சுந்தரியாகவே
அமையப் பெற்றவர் என் அப்பம்மா
சாந்தமும் அமைதியும் ஒருங்கே
இணையப் பெற்றிருந்தாயே!

புன்னகையை உனது அழகிய
மொழியாகவே வைத்திருந்தாயே! ~ அப்பம்மா
இனி அப்புன்னகையை எப்போது
நான் காண்பது?

அப்பம்மா நான் அருகில் இருந்த காலங்கள்
சொற்பமே ஆயினும் நம் பாசம்
ஆழ்கடலினும் பெரியது

எப்போது? உனைக் காண்பினும்
அன்பாக கதை பேசி, கொஞ்சி,
முத்தமிட்டு என்னை அரவணைப்பாய்?
இனி அந்த கொஞ்சல்களும் முத்தங்களும்
யாரிடம் கிடைக்கும்? அப்பம்மா!

சிறுபிள்ளைதனில் நானிருக்க
சோறும் மீனும் சேர்த்து பிசைந்து
அமுதூட்டினாயே ~ அப்பம்மா
மீண்டும் எப்போது எனக்கு கிடைக்கப்பெறும் அப்பேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்சாயல் நான் என்று மனதுருகும் என் அப்பா
உன் உருவம் நான் இனிமேல் காண்பது எப்போது? அப்பம்மா!
பெரியவரின் ஆசிபெற்று வாழ்ந்திடுதல்
புண்ணியமாம் அதை நானும் பெற்றிடலானேன்

மனமுவந்து ஆசீர்வதித்தாய் என் மனம் போல்
நல்வாழ்வு வாழ்வேன் என, உங்கள் வார்த்தை
என்னை வாழவைக்கின்றது - அப்பம்மா!

மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் சென்ற செய்தி கேட்டதனில்
மனம் பதைப்பதைத்து போனது அப்பம்மா!
உன் வதனம் நான் காண ஓடோடி வந்த போது
எனை அணைக்கும் உன் கரங்கள் சலனம் அற்று இருந்ததேனோ!
என் பிள்ளை அஸ்வினியா இது என கேட்கும் அந்த
குரல் ஓசை சங்கமித்து நின்றதே அப்பம்மா!

பெரு விருட்சமாய் வேர் ஊன்றி வளர்ந்தாய் அப்பம்மா!
இதில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
என விழுதுகள் பல கண்டாய்!
அகவை நூறு காண்பாய் என
நான் நினைத்தேன் அவசரமாய் எனை விட்டு
போனதேங்கே அப்பம்மா!

வள்ளிமுத்து என்று ஊரார் அழைக்கப் பெற்றாய் அப்பம்மா!
இன்று இம்முத்து கடவுடன் சங்கமமாகி இறைவனடி சென்றதே
இனிமேல் எப்போது காண்பேன்
இந்த அருமை முத்தினை...?

பேத்தி,
**அஸ்வினி கருணானந்தராசா**
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்

விசாலமாய் மனம் கொண்ட விசாலாட்சியும்
தாராள குணம் கொண்ட சாமித்தம்பியும்
தவமாய் தவமிருந்து பெற்றெடுத்த முத்தே அப்பம்மா!

இரத்தினம் போல் பிரகாசித்த நவரெத்தினபிள்ளையை
எத்தனை இடரிலும் உடனிருப்பேன் என்று
பத்திரமாய் கைபிடித்த வள்ளிமுத்தே ~ அப்பம்மா!

விஜயசுந்தரி என்ற தெய்வ அம்சமே முத்துப்போல்
நயமாய் மின்னிட எல்லோரும் வள்ளிமுத்தென்றனரோ!
நியாயத்தின் மொத்த உருவமான நேர்மை முத்தே அப்பம்மா!

இல்லறம் இனிதே பேணிக் காத்து, நல்லறம் தனிலே
கணவன் பிள்ளைகளை இமைபோல் காத்து
சொல்லறம், நல்குணம் நவின்று பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகளை வளர்த்தாயே! அன்புமுத்து ~ அப்பம்மா!

உடல் திடமும், மனோதிடமும் பேரப்பிள்ளைகளுக்கு ஊட்டி
பாலூட்டி, சீராட்டி, வழிகாட்டி, இடரோட்டி வளர்த்தாயே அப்பம்மா
பிள்ளைகளின் பேரமுதே! புண்ணியமே! ஒளிர் முத்தே அப்பம்மா!

பிள்ளைகள் தாண்டி பேரன், பேத்தி எமக்கும் பாசக்கிளை பரப்பி
நல்லதாய் அறிவுறுத்தி, வழிகாட்டி, சோறூட்டி அன்பு மழை பெய்து
வெல்லலாம் நீங்களும் என்று நம்பிக்கை தந்த பாசமுத்தே அப்பம்மா!

கொடிய காலன் உனைக் கவர்ந்து கனதூரம் கொண்டு சென்றானே!
கதறுகின்றோம், பதறுகின்றோம் உனை காணாமல்
மீண்டும் வந்து எங்கள் வம்சமுத்தாய் நீ பிறக்க வேண்டும் ~ அப்பம்மா!

பேரப்பிள்ளைகள்
**நித்தியானந்தன்தனுஷா, சண்முகராசா பகீரதன்,**
**சண்முகராசா ஜெனோஷன்**
**களுவாஞ்சிகுடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மாவின் பிரிவால்வாடும் பேரப்பிள்ளை

*அம்மம்மா வீடு தேடி வரும் போது*
*என்னை அரவணைத்து உணவு ஊட்டி*
*இனிய மொழிகள் சொல்லி ஆறுதல் கொடுக்கும்*
*எனது விஜயசுந்தரி (வள்ளிமுத்து) – அம்மம்மாவே!*

*குறும்புகள் பல செய்துகொண்டு சுற்றித் திரியும்*
*என்னை அழைத்து செல்லமாக கண்டிப்பாயே!*
*இப்போது எனக்கு புத்தி சொல்ல*
*யார் உள்ளார்? - அம்மம்மாவே!*

*நான் உங்கள் உள்ளங்கைக்குள் தானே*
*வளர்ந்தேன் அன்பான கதையும் விளையாட்டும்*
*சிரித்து பேசியதும் பெறும் பாராட்டுக்களைப்*
*பகிர்வதும் உங்களுடன் தானே – அம்மம்மா*

*கார்மழை பெய்த பின் கடும் வெயிலெரிக்கும்*
*இதுவே இயற்கை என நினைத்து*
*இறைவனடி சேர்ந்த நீங்கள் இறைவனாய்*
*நின்று எனக்கு நல்வழி காட்டுவீராக - அம்மம்மா*

பேரன்,
**பரந்தாமன் தனுஜெயன்**
பட்டிருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு அமரர் திருமதி நவரெத்தினபிள்ளை விஜயசுந்தரி(வள்ளிமுத்து) நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் நேரில் வந்து பார்த்து ஆறுதல் கூறி அரவணைத்த அன்புள்ளங் களுக்கும் மற்றும் தொலைபேசி மூலமாக சுகம் விசாரித்து ஆறுதல் வார்த்தைகள் கூறியோருக்கும், அமரர் திருமதி விஜயசுந்தரி(வள்ளிமுத்து) அவர்களின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மின்னஞ்சல், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையம், மலர்மாலை, கண்ணீர் அஞ்சலி பதாகைகள் மூலம் எங்கள் துயர்களை பகிர்ந்துகொண்டோருக்கும், அரச திணைக்களங்கள், மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், பிரதேச சபை, ஆட்டோ சாரதி சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும், சமய கிரியைகளை முறையாக நடாத்திய சைவக் குருக்கள்மார்களுக்கும், திருமுறைகளை ஓதியோர்களுக்கும், எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் இந்நூலினை அச்சிட்டு உதவிய கொழும்பு கௌரி அச்சகத்திற்கும், அங்குள்ள உத்தியோகத்தர்களுக்கும், எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மூத்த புதல்வன்
**நவரெத்தினபிள்ளை கருணானந்தராசா**
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நவரெத்தினபிள்ளை, விஜயசுந்தரி (வள்ளிமுத்து) அவர்களின் வம்சாவழி

**தம்பிலுவில்**

வில்லியம்பிள்ளை + நாகமணி

- நவரெத்தினபிள்ளை
- கோணாமலை
- ரஞ்சிதமலர்
- சொர்ணபூரணம்
- சதாசிவம்

**களுவாஞ்சிகுடி**

சாமித்தம்பி + விசாலாட்சி

- **விஜயசுந்தரி (வள்ளிமுத்து)**
- மகேஸ்வரி
- சண்முகநாதன் (வடிவேல்)

**நவரெத்தினபிள்ளை + விஜயசுந்தரி**

- தயாநிதி + பேரின்பராசா
  - ஜெனிஸ்கரன் (அமரர்)
  - சுபெனீஸ்வதன்
  - ஜினோதினி
  - நிலோஜினி
  - வெனின்சன்
- கலாநிதி (அமரர்)
- கருணானந்தராசா + நிர்மலா
  - மயூரதன்
  - அஸ்வினி
- சண்முகராசா + மேகலா
  - தனுஷா
  - பகீரதன்
  - ஜனோஷன்
- குகராசா + பிரபாஜினி
  - பவித்ரா
  - கிரிசாந்தன்
- ஆனந்தராசா + கலாநிதி
  - நிசாந்தினி
  - சுகந்தன்
  - சுபானி(சுது)
  - அனுசியா
- இரவிந்திராசா (அமரர்)
- பிரகலாதன் + வசந்தா
  - ஏலியா
  - பிரோமோதினி
- ரஜனி + பரந்தாமன் (கண்ணன்)
  - தனுஜெயன்

சுபெனீஸ்வதன் + மர்லின்சுனேத்திரா

ஜினோதினி + வொனிவெஞ்சுரா
- எபின்சன்
- டெனின்சன்
- எயின்ஸ்லி

நிலோஜினி + மதன்லால்
- ஜென்சன்
- அலென்சன்

தனுஷா + நித்தியானந்தன்
- கிருத்திகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ. அது நன்றாகவே
நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்.
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ.
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ.
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ.
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.

' இதுவே உலக நியதியும்
எனது படைப்பின்
சாராம்சமுமாகும் '



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org